# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**


# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

நேரம்: 90 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

எ+கா: "தமிழுக்கும் அமுதென்று பெயர்" என்று பாடியவர் பாரதிதாசன் .

(சின்னத்தம்பிப்புலவர், பாரதிதாசன், பாரதியார்)

1. தமிழருடைய வீரத்தைக் கூறும் நூல் ____________________.

(அகநானூறு, புறநானூறு, தொல்காப்பியம்)

2. மாட்டுப்பொங்கலைத் தை ____________________ கொண்டாடுவர்.

(முதலாம் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள்)

3. நாங்கள் கோடைகால விடுமுறையை ____________________க் கழிப்போம்.

(இகழ்ச்சியாக, புகழ்ச்சியாக, மகிழ்ச்சியாக)

4. பனிக்கரடிகள் பார்க்க ____________________ இருக்கும்.

(அலகாக, அழகாக, அளகாக)

5. இனியனால் அஞ்சல் ____________________.

(எழுதப்பட்டது, எழுதினான், எழுதுவான்)

6. பனிகாலத்தில் வீட்டில் வெப்பம் தர உதவுவது ____________________.

(குளிரூட்டி, சூடாக்கி, குளிர்பதனப்பெட்டி)

7. அதியமான் வேட்டையாடக் ____________________ச் சென்றான்.

(வீட்டுக்கு, நாட்டுக்கு, காட்டுக்கு)

8. வீரஞ்செறிந்த வன்னியின் கடைசி மன்னன் ____________________.

(கயிலைவன்னியன், பண்டாரவன்னியன், சங்கிலியன்)

9. 80 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________________.

(என்பது, எண்வது, எண்பது)

10. உண்மை என்பதன் எதிர்ச்சொல் ____________.

(பொய், மெய், சேய்)

11. பனிகாலத்துக்கு முன்வரும் காலம் ____________.

(கோடைகாலம், இலைஉதிர்காலம், இலைதளிர்காலம்)

12. வில்லவராய முதலியார் வாழ்ந்த ஊர் ____________.

(வேலூர், தகடூர், நல்லூர்)

13. உடற்பயிற்சிகளில் ஒன்று ____________.

(நீச்சல், படித்தல், இருத்தல்)

14. பூ + சாடி என்பதைச் சேர்த்து எழுதினால் ____________.

(பூசாடி, பூட்சாடி, பூச்சாடி)

15. யானை பிளிறும். அது போல் சிங்கம் ____________.

(கத்தும், முழங்கும், உறுமும்)

16. "அச்சமில்லை அச்சமில்லை....... என்ற பாடலைப் பாடியவர்

____________.

(பாரதியார், ஔவையார், திருவள்ளுவர்)

17. சிறுதுளி பெரு ____________.

(வெல்லம், வெழ்ழம், வெள்ளம்)

18. மாதவி ____________ என்று சிரிக்கிறாள்.

(கலகல, சலசல, பளபள)

19. செழியனும் குயிலியும் ____________.

(ஓடுகின்றான், ஓடுகின்றாள், ஓடுகின்றனர்)

20. பனைமரத்தில் இருந்து கிடைப்பது ____________.

(இளநீர், நுங்கு, தேங்காய்)

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| அணிஅணியாக | சொரசொர | கீச்கீச் |
| படபட | அக்கம்பக்கம் | ~~கணீர்கணீர்~~ |

எ+கா:

ஆலயமணி கணீர்கணீர் என்று ஒலித்தது.

1. பாட்டியின் கை ______________ என இருந்தது.
2. சிறுவர் ______________ பார்த்து வீதியைக் கடந்தனர்.
3. குருவிக் குஞ்சு ______________ என்று கத்தியது.
4. மாணவர் விளையாட்டுத் திடலில் ______________ நிற்கின்றனர்.
5. மாறனின் இதயம் பயத்தினால் ______________ என்று அடித்தது.

புள்ளிகள் 05

## 3) உறுப்பமைய எழுதுக.

விருந்தோம்பல் ஒரு சிறந்த பண்பாகும்.

______________________________________________

புள்ளிகள் 03

4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தைத்த | வாசித்த | வென்ற | விழுந்த | ~~அனுப்பிய~~ | நிறைந்த |

எ+கா: சேந்தன் அனுப்பிய அஞ்சல் கிடைத்தது.

1. கோதை கீழே ______________ பொம்மையை எடுத்தாள்.

2. செழியன் தான் ______________ நூலை மூடினான்.

3. அம்மா ______________ சட்டை அழகாக இருந்தது.

4. தைப்பொங்கல் மகிழ்ச்சி ______________ நன்னாள்.

5. போட்டியில் ______________ சிறுவரை மக்கள் பாராட்டினர்.

புள்ளிகள் 05

5) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி; வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.

எ+கா: வில்லவராயர் வீட்டைத் தேடி ஓர் அறிஞர் வந்தார்.

1. நாம் சத்துள்ள உணவுகளை உண்ண ______________________.

2. திருக்குறள் திருவள்ளுவரால் ______________________.

3. பாவலன் நாளை பேருந்தில் ஊருக்குச் ______________________.

4. பொங்கல் பொங்கிக் கதிரவனுக்குப் ______________________.

5. கூத்துப் பாடல்கள் கேட்க இனிமையாக ______________________.

6. செய்வன திருந்தச் ______________________.

புள்ளிகள் 12

6) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செ | ண் | ப | க | ம் | வ | கி | கொ |
| தி | ம | ன் | னா | ர் | வு | ளி | க் |
| ரு | ந | ல் | லூ | ர் | னி | நொ | கு |
| கோ | பு | க | ழு | கு | யா | ச் | |
| ண | றா | ப | ரு | ந் | து | சி | ஆ |
| ம | யி | ல் | சி | லா | ப | ம் | ந் |
| லை | யா | ழ் | ப் | பா | ண | ம் | தை |

| இடங்கள் | பறவைகள் |
|---|---|
| எ+கா: கிளிநொச்சி | செண்பகம் |
| 1. ______ | 1. ______ |
| 2. ______ | 2. ______ |
| 3. ______ | 3. ______ |
| 4. ______ | 4. ______ |
| 5. ______ | 5. ______ |

புள்ளிகள் 10

7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து; கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| பண்டாரவன்னியன் | ~~வன்னியர்~~ | தொடுத்தனர் |
| அடங்காப்பற்று | ஆங்கிலேயர் | வெற்றி |

இலங்கையின் வன்னிப்பகுதியை முன்பு ______வன்னியர்______ ஆண்டனர். இலங்கையை ____________ ஆண்ட காலத்தில் வன்னியைப் பண்டாரவன்னியன் ஆண்டான். ஆங்கிலேயர் வன்னியைப் பிடிக்க முயன்றனர். ____________ அதனை எதிர்த்தான். ஆங்கிலேயர் பண்டாரவன்னியன் மீது போர் ____________. ஆங்கிலேயரால் வன்னியை ____________ கொள்ள முடியவில்லை. அதனால் வன்னி ____________ என்று அழைக்கப்பட்டது.

புள்ளிகள் 10

7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து; கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| பண்டாரவன்னியன் | ~~வன்னியர்~~ | தொடுத்தனர் |
| அடங்காப்பற்று | ஆங்கிலேயர் | வெற்றி |

இலங்கையின் வன்னிப்பகுதியை முன்பு ___வன்னியர்___ ஆண்டனர். இலங்கையை ______________ ஆண்ட காலத்தில் வன்னியைப் பண்டாரவன்னியன் ஆண்டான். ஆங்கிலேயர் வன்னியைப் பிடிக்க முயன்றனர். ______________ அதனை எதிர்த்தான். ஆங்கிலேயர் பண்டாரவன்னியன் மீது போர் ______________. ஆங்கிலேயரால் வன்னியை ______________ கொள்ள முடியவில்லை. அதனால் வன்னி ______________ என்று அழைக்கப்பட்டது.

புள்ளிகள் 10

8) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக (சொல்லியமாக) எழுதுக.

எ+கா: பழைமையான / தமிழ் / மிகப் / மொழி

தமிழ் மிகப் பழைமையான மொழி.

1. குறைவாக / பனிகாலத்தில் / இருக்கும் / பகற்பொழுது

______________________________.

2. முளையில் / தெரியும் / விளையும் / பயிரை

______________________________.

3. முல்லைக்குத் / கொடுத்தான் / பாரி / தேர்

______________________________.

4. அழகானது / வீடு / கட்டிய / நாங்கள்

______________________________.

5. சுவையாக / இனிப்புச் / தந்த / அப்பா / இருந்தது

______________________________.

புள்ளிகள் 10

9) பந்தியைப் படித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழ் ஓர் இனிமையான மொழி. தமிழில் பல அறநூல்கள் உள்ளன. திருக்குறள், நாலடியார் ஆகியவை சிறந்த அறநூல்களாகும். திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர். தமிழரது பண்பாட்டு வரலாறுகளைக் கூறும் நூல் சிலப்பதிகாரம். தமிழ் இயல் இசை நாடகம் என மூன்று பிரிவுகளை உடையது. அதனால் தமிழை 'முத்தமிழ்' எனப் போற்றுவர். தமிழ் தமிழரின் தாய்மொழி. தமிழர் வாழ்வில் தைப்பொங்கல் சிறந்த நாளாகும். தைப்பொங்கலை ஆண்டுதோறும் தைமுதலாம் நாள் கொண்டாடுவர்.

எ+கா: தமிழ் எத்தகைய மொழி?

தமிழ் இனிமையான மொழி.

1. அறநூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

____________________

2. சிலப்பதிகாரம் எதனைக் கூறுகிறது?

____________________

3. தமிழை எப்படிப் போற்றுவர்?

____________________

4. தமிழர் வாழ்வில் சிறந்த நாள் எது?

____________________

5. தைப்பொங்கலை எப்போது கொண்டாடுவர்?

____________________

புள்ளிகள் 10

9) பந்தியைப் படித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழ் ஓர் இனிமையான மொழி. தமிழில் பல அறநூல்கள் உள்ளன. திருக்குறள், நாலடியார் ஆகியவை சிறந்த அறநூல்களாகும். திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர். தமிழரது பண்பாட்டு வரலாறுகளைக் கூறும் நூல் சிலப்பதிகாரம். தமிழ் இயல் இசை நாடகம் என மூன்று பிரிவுகளை உடையது. அதனால் தமிழை 'முத்தமிழ்' எனப் போற்றுவர். தமிழ் தமிழரின் தாய்மொழி. தமிழர் வாழ்வில் தைப்பொங்கல் சிறந்த நாளாகும். தைப்பொங்கலை ஆண்டுதோறும் தைமுதலாம் நாள் கொண்டாடுவர்.

எ+கா: தமிழ் எத்தகைய மொழி?

தமிழ் இனிமையான மொழி.

1. அறநூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________

2. சிலப்பதிகாரம் எதனைக் கூறுகிறது?

______________________________

3. தமிழை எப்படிப் போற்றுவர்?

______________________________

4. தமிழர் வாழ்வில் சிறந்த நாள் எது?

______________________________

5. தைப்பொங்கலை எப்போது கொண்டாடுவர்?

______________________________

புள்ளிகள் 10

10) படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15